# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No. 4/2025**
Prosecution: **PW- 4**

**Deposition of the witness of LW- 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு. மருது | **District** | இராணிப்பேட்டை |
| **Father's Name** | குமார் | **Calling** | ஓட்டுனர் |
| **Age** | 38/2026 | **Religion** | --- |
| **Village/Town** | ஆற்காடு | **Caste** | --- |
| **Taluk** | ஆற்காடு | **ID Card No.** | 2728 1640 9034 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of May 2026.

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

1. நான் எண்.682, வேல் முருகேசன் தெரு, தோப்புகாணா, ஆற்காட்டில் வசித்து வருகிறேன். ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன்.

2. என்னிடம் காட்டப்படும் எதிரி ராஜாவின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 10.06.2013 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது.

3. சுமார் 12 அல்லது 13 வருடங்களுக்கு முன்பு ஆற்காடு நகர காவல் நிலையத்திற்கு சொந்த வேலையாக சென்றபோது போலீசார் என்னிடம் மேற்படி இரண்டு சாட்சி கையொப்பங்களை பெற்றனர். இந்த இரண்டு சாட்சி கையொப்பங்களை எந்த வழக்கு சம்மந்தமாக, யாரை விசாரித்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4. எதிரி ராஜாவின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 10.06.2013 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் முறையே **அ.த.சா. 3** மற்றும் **அ.த.சா.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது, கடந்த 10.06.2013 ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு நானும், என் நண்பர் லோகேஷும் ஆற்காட்டிலிருந்து வேலூர் செல்லும் சாலையில் கண்ணமங்கலம் கூட்ரோட்டிடம் சென்று கொண்டிருந்தபோது, ஆற்காடு நகர காவல் ஆய்வாளர் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, எங்களை நிறுத்தி எங்களிடம் இருந்த வாகனங்களை சோதனை செய்து கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த TN 07 H 1782 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரை மடக்கி விசாரித்தபோது, காரின் ஓட்டுனர் தன்னுடய பெயர் சந்திர சேகர் என்றும், அவருடன் எதிரிகள் நான்கு பேர் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

2. காரிலிருந்த எதிரி ராஜாவை எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தபோது, அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலமான "கடந்த 10.06.2013 ஆம் தேதி காலை சென்னையிலிருந்து TN 07 H 1782 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரினை திருடி வருவதாகவும், அந்த காரை சந்திரசேகர் ஓட்ட நாங்கள் வேலூருக்கு சென்றபோது, அங்கு போலீசார் நடமாட்டம் அதிகமாக இருந்ததால் ஆற்காடு பக்கம் போகலாம் என்று பூட்டுத்தாக்கில் காரை நிறுத்தி டீக்குடித்துவிட்டு டீக்கடைக்கு அருகில் இருந்த

ஒரு கடையில் எதிரி ராஜா சென்று ஒரு சிறிய நைலான் கயிறு மற்றும் இரண்டு கத்திகளை வாங்கி காரில் வைத்துக்கொண்டு காரில் ஆற்காட்டிலிருந்து கண்ணமங்கலம் கூட்ரோடு அருகே சென்றபோது, போலீசார் தங்களை பிடித்துக்கொண்டதாக" அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் பதிவு செய்தார்களா என்றால் சரியல்ல.

3. போலீசார் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், லோகேஷும் சாட்சி கையொப்பம் செய்தோமா என்றால் சரியல்ல. அன்றைய தினமே பகல் 02.00 மணிக்கு கன்னமங்கலம் கூட்ரோட்டிடம் காரை ஓட்டிய சந்திர சேகர் என்பவரிடமிருந்து எங்கள் முன்னிலையில் TN 07 H 1782 பதிவு எண் கொண்ட டாடா இண்டிகா காரை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்களா என்றால் சரியல்ல. காரிலிருந்த சுமார் 22 செ.மீ நீளமுள்ள இரண்டு ஸ்டீல் கத்திகளையும், ஒரு ஆரஞ்சு கலர் நைலான் கயிறு ஒன்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றிக்கொண்டு எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்களா என்றால் சரியல்ல.

4. எதிரி இராஜாவின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு, எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.